**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 145/2021**

வாக்குமூலம்: வா.சா.1 – சத்யா

**02.02.2026 : சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

2 ஆம் வாதி எனது மகள் என்றால் சரிதான். 2 ஆம் வாதியின் கணவர் பெயர் நந்தகோபால் என்றால் சரிதான். 2 ஆம் வாதியின் 2 ஆம் கணவரின் பெயர் பெலிக்ஸ் பிரபு என்றால் சரிதான். பெலிக்ஸ் பிரபு கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். 2 ஆம் வாதி பெலிக்ஸ் பிரபுவை திருமணம் செய்த போது 2 ஆம் வாதியானவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டார் என்றால் சரிதான். 2 ஆம் வாதியின் கிறிஸ்துவ பெயர் என்ன என்றால் அவிலா ஆகும். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தெய்வநாயகியின் மகள்கள் என்றால் தெரியாது. 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் 1 ஆம் பிரதிவாதி தாயார் என்றால் சரிதான். தெய்வநாயகத்திற்கு நான் முதல் மனைவி என்றும், கமலா தேவி 2 வது மனைவி என்றும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் தெய்வநாயகத்திற்கும் திருமணம் ஆகி சுமார் 34 வருடம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது திருமணத் தேதியை நான் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. திருமணம் பெற்றோர் வீட்டில் நடந்தது என்று தான் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், சரியான முகவரி சொல்லவில்லை என்றால் சரிதான். கமலா தேவியின் கணவர் கருப்பணன் என்று சொல்வதற்கும், கமலா தேவியும் கருப்பணன் அவர்களும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கும், ஆதரவாக என்னிடம் எவ்வித ஆதாரமும் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. எனக்கும், தெய்வநாயகத்திற்கும் கருத்து வேறுபாடு காரணமாகத் தான் பிரிந்து வந்து விட்டோம் என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திருமணம் ஆகி சுமார் 7, 8 வருடங்கள் கழித்து பிரிந்து விட்டோம் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் தங்கவேல் என்றால் சரிதான். ராஜாஜி ரோட்டில் உள்ள கந்தசாமியின் மகன் பரமசிவம் எனது உறவினரா அல்லது தெய்வநாகத்தின் உறவினரா என்றால் பொதுவான சொந்தக்காரர் ஆவார். மானூரில் வசித்து வரும் சின்னச்சாமி மகன் நாட்ராயன் தெய்வநாயகத்திற்கு பழக்கமானவரா என்றால் பழக்கமானவர் தான்.

(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.